தருக்கம்

பொதுப்பணிகள் – கருணை அடிப்படையில் பணி நியமனம் – தமிழ்நாடு அமைச்சுப் பணி – திரு.செ.அரவிந்த், (த/பெ. (லேட்) கை.செந்தில்குமார்) – தட்டச்சர் பதவியில் பணிநியமனம் – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் (எடி2) துறை

அரசாணை (3ப) எண்.3

நாள்: 04.02.2020
திருவள்ளுவர் ஆண்டு 2051
விகாரி, தை – 21

படிக்க :-

1. அரசாணை (ப) எண்.1142, மக்கள் நல்வாழ்வு (ம) குடும்ப நலத்துறை, நாள். 22.05.2017.
2. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் (ம) நிர்வாகச் சீர்த்திருத்தத் (எம்) துறை, நாள். 01.08.2018.
3. மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநரிடமிருந்து பெறப்பட்ட கடித ந.க.எண்.46865/நிபி8/1/2018, நாள். 12.09.2018.

******

ஆணை :-

பார்வை மூன்றில் படிக்கப்பட்ட மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநரின் கடிதத்தில், திருவாரூர் இணை இயக்குநர் நலப்பணிகள் அலுவலகத்தில் உதவியாளராகப் பணியாற்றிக்கொண்டிருந்தபோது திரு.கை.செந்தில்குமார், என்பவர் 26.12.2003 அன்று பணியிடை மரணமடைந்தார் என்றும், அவர் அப்பணியில் தகுதிகாண் பருவம் முடிக்கப் பெற்றவர் என்றும், அவரின் பிறந்த தேதி 29.07.1967 என்றும், அவருடைய உத்தேச ஓய்வு பெறும் நாள் 31.07.2025 என்றும் குறிப்பிட்டு, இறந்த அரசு ஊழியரின் மனைவி தனது மகன் திரு.செ.அரவிந்த், என்பவருக்கு பணிநியமனம் வேண்டி 02.05.2008 அன்று விண்ணப்பித்திருந்தார் என்றும், தனியர் பிறந்த தேதி 26.11.1991 என்றும், திரு.செ.அரவிந்த் என்பவர் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்று கருணை அடிப்படையில் தட்டச்சராகப் பணிநியமனம் பெறுவதற்கான ஏனைய தகுதிகளையும் பூர்த்தி செய்திருந்ததால், தனியரைத் தற்காலிகமாகக் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில், மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி பணியமர்த்த உத்தரவிடப்பட்டு, அதன்படி மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககத்தில் தட்டச்சராக 25.09.2017 முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார் என்றும் குறிப்பிட்டு, தனியர் தட்டச்சராகப் பணியில் சேர்ந்த நாளான 25.09.2017 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடுமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநரின் கருத்துருவை அரசு பரிசீலித்து, அதனை ஏற்று திரு.செ.அரவிந்த், தட்டச்சர் என்பவருக்கு, விண்ணப்பம் அளிக்கப்பட்ட நாளுக்குப் பின்னர் பெற்ற தொழில் நுட்பக் கல்வி தகுதியின் அடிப்படையில் பணிநியமனம் வழங்கப்பட்டுள்ளதால், தனியர் பொருட்டு அரசாணை (நிலை) எண்.560, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள். 03.08.1977–ஐயும், கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி விண்ணப்பிக்கும்போது தனியர் விண்ணப்பம் அளித்த நாளான 02.05.2008 அன்று 18 வயதினைப் பூர்த்தி செய்யாமல் இருந்ததால், தனியர் பொருட்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 பிரிவு 20 (6) (b)–க்கும், மற்றும் தனியரின் பணியினை முன்தேதியிட்டு வரன்முறை செய்ய ஏதுவாக தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 28(2)–ஐயும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 பிரிவு 58–ன்கீழ் ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி தளர்த்தி, தனியரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 25.09.2017 முற்பகல் முதல் அப்பணியிடத்திற்குத் தேவையான உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன், பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால் தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் / ஊதிய நிலுவையிருப்பின் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

4. இவ்வரசாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் துறைகளின் இசைவினை முறையே அத்துறைகளின் அ.சா.எண்.23772/க்யூ1/2019, நாள் 27.01.2020 மற்றும் அ.சா.எண்.3143/ஜி2/2020, நாள் 29.01.2020-இல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பீலா ராஜேஷ்,
அரசு செயலாளர்.

பெறுநர்
மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர், சென்னை–600 006.
திரு.செ.அரவிந்த், தட்டச்சர், (உரிய வழியாக)
மாநில கணக்காயர், சென்னை–600 018.
நகல்
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை–600 009.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் துறை, சென்னை–600 009.
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் (தகவுப்பிரிவு) துறை, சென்னை–600 009.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்